# மாதிரி வினாத்தாள்-1
# வளரறித்தேர்வு

பாடம் : தமிழ் மதிப்பெண்;40

வகுப்பு : ஏழாம் வகுப்பு பிரிவு : நேரம் 80 நிமிடம்

***I.* கீழ்க்காணும் பத்தியைப் படித்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

ஒரு மொழியைப் பயன்படுத்துகின்றவர்களின் எண்ணங்கள், அம்மொழியில் இடம் பெற்றிருக்க வேண்டும். மொழியின் தன்மை மக்களின் தன்மையைச் சார்ந்திருப்பது இயற்கையே. மக்கள் அறிவுள்ளவராக இருந்தால், அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும்.வேலை தெரியாத தொழிலாளி தன் கருவியின் மீதுசீற்றம் கொண்டானாம். என ஓர் ஆங்கிலப் பழமொமி உண்டு. மொழி நிறைவு பெற்றதாக இல்லை எனக் குறை சொல்பவர்கள் இந்த தொழிலாளியைப் போன்றவர்களே. குறைபாடு, மொழியைப் பயன்படுத்துபவர்களிடம் தான் இருக்கிறதே அன்றி மொழியில் இல்லை.

**வினாக்கள்:** $5 x 1 = 5$

1. எது மொழியில் இடம்பெறும்?
   (அ) பயன்பாடு (ஆ) எண்ணம் (இ) பயன்படுத்துபவர்

2. மொழியின் தன்மை எதைச் சார்ந்திருக்கும்?
   (அ) இயற்கை (ஆ) எண்ணம் (இ) மக்களின் தன்மை

3. குறை என்பது எதில் இல்லை
   (அ) பயன்படுத்துபவர் (ஆ) தொழிலாளி (இ) மொழி

4. வேலை தெரியாத தொழிலாளி எதன் மீது சீற்றம் கொள்வான்?
   (அ) மொழி (ஆ) கருவி (இ) தன்மீது

5. இப்பத்தியில் எப்பழமொழி பற்றிக் கூறப்பட்டுள்ளது.
   (அ) ஆங்கிலம் (ஆ) தமிழ் (இ) கிரேக்கம்

***II.* கீழ்க்காணும் பத்தியைப் படித்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

காந்தியடிகள் சிலகாலம் தென்னாப்பிரிக்காவில் வழக்குரைஞராகப் பணியாற்றி வந்தார். ஒருநாள் தொடர்வண்டியில் முதல்வகுப்பில் பயணம் செய்துகொண்டிருந்தார்.அப்போது, அதே பெட்டியில் அவருடன் பயணம் செய்து வந்த வெள்ளையர் ஒருவர், அவரைக் கீழே இறங்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்.

அதற்குக் காந்தியடிகள், தன்னிடம் முதல் வகுப்புப் பயணச்சீட்டு இருப்பதாகவும், இதில் தான் பயணம் செய்வேன் என்று கூறி இறங்க மறுத்தார். ஆனால், அந்த வெள்ளையர் தொடர்வண்டிப் பாதுகாவலரை அழைத்துக் கறுப்புநிறம் கொண்ட இந்தியர், வெள்ளையருடன் பயணம் செய்யக்கூடாது என்று கூறிக் காந்தியடிகளைக் கீழே இறக்கிவிட்டார்.நிறத்தைக் காரணம் காட்டித் தம்மைத் தீண்டத்தகாதவர் என்று கூறி ஒதுக்கும் தீண்டாமைச் செயலை எண்ணிக் காந்தியடிகள் வருந்தினார்.

**வினாக்கள்:** $5 x1 = 5$

1.காந்தியடிகள் எங்கு வழக்குரைஞராக பணியாற்றினார்?
(அ) அமெரிக்கா (ஆ) தென்னாப்பிரிக்கா (இ) லண்டன்

2.தன்னிடம் எவ்வகுப்புப் பயணச்சீட்டு இருப்பதாக கூறினார்.
(அ) முதல் (ஆ) இரண்டாம் (இ) மூன்றாம்

3.காந்தியடிகள் எதில் பயணம் செய்தார்?
(அ) பேருந்து (ஆ) கப்பல் (இ) தொடர்வண்டி

4.தீண்டாமைச் செயலைக் கண்டு காந்தியடிகள் யாது செய்தார்?
(அ) வருந்தினார் (ஆ) கோபமடைந்தார் (இ) மகிழ்ந்தார்

5.வெள்ளையர் யாரை அழைத்தார்?
(அ) நண்பர் (ஆ) தொடர்வண்டி பாதுகாவலர் (இ) காந்தியடிகள்

**பகுதி – ஆ ( எழுதுதல் திறன் )**

***I.* கடிதம் எழுதுக. ( 1 மட்டும் )** $1 x 5 = 5$

1. காணாமல் போன மிதிவண்டியைக் கண்டு பிடித்து தருமாறு காவல் ஆய்வாளருக்கு கடிதம் எழுதுக.

2. நீ படித்து மகிழ்ந்த நூலைப் பற்றி நண்பனுக்கு கடிதம் எழுதுக.

***II.* கட்டுரை எழுதுக. ( 1 மட்டும் )** $1 x5 = 5$

1. தமிழ் மொழியின் சிறப்பு 2. சுற்றுப்புறத் தூய்மை

www.kalvikkol.com

## பகுதி - இ $10 x 1 = 10$

***I***. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

1. பதம் என்பது
(அ) சொல் (ஆ) தொடர் (இ) பத்தி

2. பதம் எத்தனை வகைப்படும்
(அ) 3 (ஆ) 2 (இ) 4

3. பகாபதம் எத்தனை?
(அ) 5 (ஆ) 6 (இ) 4

4. மண் என்பது பகாப்பதம்.
(அ) பெயர் (ஆ) வினை (இ) உரி

5. நில் என்பது பகாப்பதம்.
(அ) பெயர் (ஆ) உரி (இ) வினை

6. அணி என்பதன் பொருள்
(அ) அழகு (ஆ) சொல் (இ) அணிவது

7. அணி எத்தனை வகைப்படும்?
(அ) 4 (ஆ) 3 (இ) 2

8. ஒரு பொருளை இயல்பாக கூறுவது
(அ) இயல்பு நவிற்சி அணி (ஆ) உயர்வுநவிற்சி அணி (இ) எதுவுமில்லை

9. விண்ணைத் தொடும் மலை என்பது
(அ) இயல்பு (ஆ) உயர்வு (இ) எதுவுமில்லை

10. பகுபத உறுப்புகள் எத்தனை?
(அ) 2 (ஆ) 4 (இ) 6

## பகுதி - ஈ $2 x 5 = 10$

***I***. **எவையேனும் ஐந்திற்கு மட்டும் விடையளி:**

1.வள்ளுவர் குறிப்பிடும் அழியாச் செல்வம் பற்றி எழுதுக.

2.சிறுமியர் விளையாடும் விளையாட்டுகள் யாவை?**அவற்றைப்** பற்றி எழுதுக.

www.Kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-2
# பருவத்தேர்வு

**வகுப்பு : ஏழாம் வகுப்பு** **மதிப்பெண் : 90**
**பாடம் :தமிழ்** **நேரம் : 3 மணி**

**பகுதி – அ ( படித்தல்)**

***I*. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (5)

சோழர் கால இலக்கியங்கள் தமிழ் மொழியின் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலமும் சோழர் காலமாகும். சோழர் காலத்தினை தன்னரசு காலம் எனத் தமிழண்ணல் அவர்கள் தமது நூலில் குறிப்பிடுகின்றார். சோழர் காலம் வேற்று நாடுகளின் மீது மிகுதியாக படையெடுப்பு நடத்திய காலத்தில் வடமொழி தமிழில் கலப்பது மிகுதியாயிற்று. கி.பி.10-ஆம் நூற்றாண்டில் சோழர்கள் குறுநில மன்னர்களாக சில பகுதிகளை ஆண்டு வந்தார்கள். விஜயாலய சோழன் , சோழ சாம்ராஜ்யத்தை நிறுவியவன் ஆவான்.

**வினாக்கள் :**

1. சோழர் கால இலக்கியங்கள் தமிழ் மொழியின் ________ இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன.
   (அ) தற்கால (ஆ) பிற்கால (இ) பொற்கால

2. சோழர் காலத்தினை தன்னரசு காலம் என தமது நூலில் குறிப்பிட்டவர்.
   (அ) தமிழண்ணல் (ஆ) அண்ணல் (இ) தமிழரசு

3. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலம்.
   (அ) சேரர்காலம் (ஆ) சோழர்காலம் (இ) பல்லவர் காலம்

4. சோழர்கள் குறுநில மன்னர்களாக சில பகுதிகளை ஆட்சி செய்த காலம்.
   (அ) 10 ஆம் நூற்றாண்டு (ஆ) 11-ஆம் நூற்றாண்டு (இ) 12-ஆம் நூற்றாண்டு

5. சோழ சாம்ராஜ்யத்தை நிறுவிய சோழ மன்னன்.
   (அ) விஜயாலய சோழன் (ஆ) விஜயசோழன் (இ) சோழ விஜயன்

***II*. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (5)

ஆனந்தரங்கர் சென்னைப் பெரம்பூரில் 1709-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30ஆம் நாள் பிறந்தார். இவர் தம் மூன்று வயதில் தாயை இழந்தார். எம்பார் என்பாரிடம் கல்வி பயின்றார். அவரின் தந்தை திருவேங்கடம், மைத்துனர் நைனியப்பரின் வேண்டுகோளுக்கிணங்க புதுவையில் குடியேறினார். அங்கு அரசுப்பணியில் உதவியாளராகச் சேர்ந்து நாளடைவில் திவானாகப் பதவி உயர்வு பெற்றார். பன்மொழியறிவு பெற்ற அவர் பின் மொழிபெயர்ப்பாளர் பணியில் அமர்த்தப்பட்டார். 1736 ஆம் ஆண்டு முதல் 1761 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் நாட்குறிப்பு எழுதியுள்ளார்.

**வினாக்கள் :**

1. ஆனந்தரங்கர் பிறந்த இடம்
   (அ) பெரம்பூர் (ஆ) மொரப்பூர் (இ) ஆம்பூர்

2. ஆனந்தரங்கர் யாரிடம் கல்வி பயின்றார்.
   (அ)எம்பார் (ஆ) பீம்பார் (இ) தீன்பார்

3. ஆனந்தரங்கர் தம் மைத்துனர் நைனியப்பரின் வேண்டுகோளுக்கிணங்க குடியேறிய இடம்.
   (அ) மதுரை (ஆ) புதுவை (இ) சென்னை

4. பன்மொழியறிவு பெற்ற அவர் எப்பணியில் அமர்த்தப்பட்டார்.
   (அ) மொழியறிவு (ஆ) சொற்பெயர்ப்பாளர் (இ) மொழிபெயர்ப்பாளர்

5. எத்தனை ஆண்டுகள் நாட்குறிப்பு எழுதியுள்ளார்.
   (அ) இருபத்தைந்து (ஆ) இருபத்திநான்கு (இ) இருபது

***III*. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற சரியான விடையை எழுதுக.** (5)

புறநானூறு = புறம் + நான்கு + நூறு. புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதால் புறநானூறு எனப் பெயர் பெற்றது. புறம் என்பது ஒருவரின் வீரம் , கொடை , கல்வி , முதலிய சிறப்புகளைக் குறிக்கும். இ∴து எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று இந்நூலிலுள்ள பாடல்கள் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்றவை. இப்பாடல்கள் வாயிலாகப் பண்டையத் தமிழ் மன்னர்களின் ஆட்சிச்சிறப்பு வீரம், கொடை, கல்வி முதலியவற்றை அறியலாம். இந்நூலின் சில பாடல்களை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

www.kalvikural.com

**வினாக்கள்:**

1. புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல்.
   (அ) அகநானூறு (ஆ) புறநானூறு (இ) பத்துப்பாட்டு

2. புறநானூறு எவ்வகை நூல்களுள் ஒன்று.
   (அ) எட்டுத்தொகை (ஆ) பத்துப்பாட்டு (இ) பதிற்றுப்பத்து

3. புறநானூற்று பாடல்களை பாடியவர்கள் ________ பேர்
   (அ) சில புலவர்கள் (ஆ) ஒரு புலவர் (இ) பல்வேறு புலவர்கள்

4. இப்பாடல்கள் வாயிலாக __________ மன்னர்களின் ஆட்சிச்சிறப்பினை அறியலாம்.
   (அ) ஆங்கில மன்னர் (ஆ) தமிழ் மன்னர் (இ) ஐரோப்பிய மன்னர்

5. புறநானூற்று பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.
   (அ) ஜி.யு.போப் (ஆ) யு.ஜி.போப் (இ) வு.ஜி.போப்

**பகுதி – ஆ ( எழுதுதல் - 20 )**

***I.* கடிதம் எழுதுக. ( ஏதேனும் ஒன்று மட்டும் )** $1\ x\ 10 = 10$

1.உங்கள் ஊரில் அழிந்துவரும் காடுகளை பாதுகாக்க மரக்கன்றுகளை நட்டுத்தர வேண்டி வன ஆய்வாளருக்கு கடிதம் எழுதுக.

2.உனக்கு பிடித்த நூலைப்பற்றி நண்பனுக்கு கடிதம் வரைக.

***II.* கட்டுரை எழுதுக. : ( ஏதேனும் ஒன்று மட்டும்)** $1\ x\ 10 = 10$

1. நாட்டு முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்கு என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை எழுதுக.

2. 'மகளிர் முன்னேற்றம்' என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை வரைக.
   ( முன்னுரை – பெண்ணின் பெருமை – அரசு தரும் ஆக்கமும் ஊக்கமும் - பெண்களின் முயற்சிகள் - முடிவுரை )

**பகுதி - இ ( இலக்கணம் - 15 )** $15\ x\ 1 = 15$

***I.* உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சார்பெழுத்துகள் ___________ வகைப்படும்.
   (அ) ஐந்து (ஆ) எட்டு (இ) பத்து

2. உயிர்எழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனித்து இயங்கி முதன்மைபெற்று விளங்குவதால், இவற்றை ________ என்கிறோம்.
   (அ) சார்பெழுத்துகள் (ஆ) முதலெழுத்துகள் (இ) உயிர் எழுத்துகள்

3. க , கா . கி – என்பன எவ்வகை எழுத்துகள்.
   (அ) உயிர்ரெழுத்து (ஆ) மெய்யெழுத்து (இ) உயிர்மெய்யெழுத்து

4. எந்தெந்த எழுத்துகள் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துகள் தோன்றும்.
   (அ) உயிரும் , மெய்யும் (ஆ) மெய்யும் , ஆய்தம் (ஈ) மெய்யும் , மெய்யும்

5. அ.்.கேனத்தின் வேறு பெயர்கள்
   (அ) ஆய்தம் (ஆ) உயிர் (இ) மெய

6. ஆய்த எழுத்து ஒரு சொல்லின் ______ ல் மட்டுமே வரும்.
   (அ) முதலில் (ஆ) இடையில் (இ) கடையில்

7. உயிர்மெய் எழுத்துகள் ___________ வகையில் அடங்கும்.
   (அ) சார்பெழுத்து (ஆ) சுட்டெழுத்து (இ) முதல் எழுத்து

8. 'மதுரை , மரம் . தம்பி' – எவ்வகை சொற்கள்
   (அ) வினைச்சொற்கள் (ஆ) பெயர்சொற்கள் (இ) இடைச்சொல்

9. 'வந்தான்' – என்பது எவ்வகை சொல்.
   (அ) பெயர்ச்சொல் (ஆ) வினைச்சொல் (இ) இடைச்சொல்

10. தம்பி + உம். இதிலுள்ள 'உம்' என்பது இணைப்புச் சொல்லாக வருகிறது. இதனை ______ என்பர்.
    (அ) இடைச்சொல் (ஆ) சொல் (இ) தினை

11. ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்டபெயர் ___________

www.Kalvikkol.com

(அ) இடுகுறிப்பெயர் (ஆ) பெயர் (இ) சிறப்புப்பெயர்

12. ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்
(அ) பொருட்பெயர் (ஆ) பொதுபெயர் (இ) காரணப்பெயர்

13. 'வீடு , கோவை . பள்ளி' - இவை எவ்வகை பெயர்கள்
(அ) காலப்பெயர்கள் (ஆ) இடப்பெயர்கள் (இ) சினைப்பெயர்கள்

14. 'கண் , மூக்கு , செவி' - இவை எவ்வகை பெயர்கள்
(அ) காலப்பெயர்கள் (ஆ) இடப்பெயர்கள் (இ) சினைப்பெயர்கள்

15.'ஆடல் , பாடல்' – எவ்வகை பெயர்கள்
(அ) தொழிற்பெயர்கள் (ஆ) காலப்பெயர்கள் (இ) சினைப்பெயர்கள்

**பகுதி - ஈ ( பாடநூல் - 40 )**

*I*. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து சரியான விடையை எழுதுக.** (5)

திரிகடுகம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல்நூறு வெண்பாக்களை உடையது. சுக்கு, மிளகு , திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம். இம்மருந்தை உண்ட மனிதர்களின் உடல்நோய் நீங்கும். இதைப்போன்றே ஒவ்வொரு திரிகடுகப் பாடலிலும் இடம்பெற்றுள்ள மூன்று கருத்துகளும் மக்களின் மனமயக்கத்தைப் போக்கித் தெளிவை அளிக்கும்.

**வினாக்கள்** :

1. திரிகடுகம் __________ நூல்களுள் ஒன்று.
(அ) பதினெண்கீழ்க்கணக்கு (ஆ) எட்டுத்தொகை (இ) பதிற்றுப்பத்து

2. இந்நூல் _________ வெண்பாக்களை உடையது.
(அ) ஐந்து (ஆ) நூறு (இ) பத்து

3. 'சுக்கு , மிளகு, திப்பிலியால்' – ஆன மருந்துக்குப் பெயர்.
(அ) திரிகடுகம் (ஆ) புறநானூறு (இ) திருக்குறள்

4. ஒவ்வொரு திரிகடுகப் பாடலிலும் இடம்பெற்றுள்ள கருத்துகள்
(அ) மூன்று (ஆ) நான்கு (இ) ஐந்து

5. திரிகடுகம் நூலின் ஆசிரியர்
(அ) நல்லாதனார் (ஆ) திருவள்ளுவர் (இ) இராமானுஜம்

*II*. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து சரியான விடையை எழுதுக.** (5)

திருவாரூர் + நான்கு + மணிமாலை = திருவாரூர் நான்மணிமாலை. இது திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசர் மீது பாடப்பெற்ற நான்மணிமாலை எனப் பொருள்படும். நான்மணிமாலை என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்று. முத்து , பவளம் , மரகதம் , மாணிக்கம் என்னும் நால்வகையான மணிகளால் ஆன மாலையைப் போன்று நால்வகையான பாடல்களால் ஆன நாற்பது செய்யுள்களைக் கொண்டது.

**வினாக்கள் :**

1. திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசர் மீது பாடப்பெற்ற மாலை
(அ) நான்மணிமாலை (ஆ) மும்மணிமாலை (இ) இரட்டைமணிமாலை

2. 'நான்மணிமாலை' – எவ்வகை இலக்கியங்களுள் ஒன்று
(அ) தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் (ஆ) பத்துப்பாட்டில் (இ) எட்டுத்தொகையில

3. நால்வகையான மணிகளால் ஆன நூல்
(அ) சிலப்பதிகாரம் (ஆ) நான்மணிமாலை (இ) மணிமேகலை

4. 'நான்மணிமாலை' – எத்தனை வகை பாடல்களால் ஆனது.
(அ) ஐந்து (ஆ) நான்கு (இ) மூன்று

5. 'நான்மணிமாலை' __________ செய்யுள்களைக் கொண்டது.
(அ) முப்பது (ஆ) இருபது (இ) நாற்பது

***III***. **கீழ்காணும் பாடலைப் படித்து வினாவிற்கு விடையளி :** (4)

தலைசீவிப் பள்ளிக்கே ஓடு – நல்
தங்கப் பதுமையாம் தோழர்க ளோடு !
விலையில்லா மெய்ப்பொருள் கல்வி ! – அதை
விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி!
அழுக்கில்லா ஆடையே மேன்மை! அதை
அணிவதா லல்லவோ உடற்குண்டாம் தூய்மை

www.kattrukkol.com

ஒழுங்கோடு நூல்களைத் தூக்கி – நில்லாது
ஓடடி ஓடடி பள்ளியை நோக்கி !

- வாணிதாசன்

**வினாக்கள் :**

1. இப்பாடலை எழுதியவர்
   (அ) பாரதிதாசன் (ஆ) வாணிதாசன் (இ) பாரதியார்

2. 'பதுமை' என்னும் சொல்லின் பொருள்
   (அ) அழகு (ஆ) உருவம் (இ) ஆசிரியர்

3. விலையில்லாதது _________ கல்வி
   (அ) மெய்ப்பொருள் (ஆ) அழகில்லாகல்வி (இ) உண்மையற்றகல்வி

4. விரும்பிப் படித்தால் ___________ உண்டாம்.
   (அ) அழகு (ஆ) அறிவு (இ) அறிவில்லை

**$IV$. எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளி:** $2\ x\ 4 = 8$

1. தாய்மொழி வழிக் கல்வியின் தேவைகுறித்துக் காந்தியடிகள் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
2. மீனாட்சிசுந்தரனார் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைக் கூறுக.
3. மதுரையின் பெயர்க்காரணத்தை விவரிக்க.

**$V$. எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளி:** $2\ x\ 5 = 10$

1. 'மெய்ப்பொருள் கல்வி' என்னும் பாடல் மூலம் வாணிதாசன் கூறும் கருத்துகளை தொகுத்து எழுதுக?
2. 'கல்விக்கு எல்லை இல்லை' என்னும் பாடல் மூலம் ஔவையார் கூறும் கருத்துகளை தொகுத்து எழுதுக?
3. இறைவனின் பெருமையைத் திரு.வி.க. எவ்வாறெல்லாம் குறிப்பிடுகின்றார்?

**$VI$. கட்டுரை எழுதுக. ( ஒன்று மட்டும்)** $1\ x\ 8 = 8$

1. 'உரியது' என்னும் துணைப்பாடக் கதையை சுருக்கி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக?
2. 'அறிவு நுட்பம்' என்னும் துணைப்பாடக் கதையை சுருக்கி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக?
3. 'கோவூர்கிழார்' என்னும் துணைப்பாடக் கதையை சுருக்கி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக?

www.Kalvikural.com

# மாதிரி வினாத்தாள்-3
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஏழாம் வகுப்பு** **மதிப்பெண் : 40**
**பாடம் : தமிழ்** **நேரம் : 80 நிமிடம்**

**பகுதி – அ ( படித்தல் )**

***I*. கீழ் உள்ள பத்தியைப் படித்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** $5\ x\ 1 = 5$

சொற்களுக்குரிய பொருளை அகரமுதலி மூலம் அறிந்துகொண்ட பின் இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள பெயர்கள், கதைகள், வரலாறுகள் பழக்க வழக்கங்கள் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய தேவைகள் ஏற்பட்டன. இச்சிந்தனையின விளைவாகத் தோன்றியவையே கலைக் களஞ்சியங்கள் ஆகும் அபிதான கோசம் கலைக்களஞ்சியங்களின் முன்னோடி ஆகும்.

வினாக்கள் :

1.சிந்தனையின் விளைவாக எது தோன்றியது?
(அ) அகரமுதலி (ஆ) கலைக்களஞ்சியம் (இ) தேவைகள்

2. கலைக்களஞ்சியத்தின் முன்னோடி எது?
(அ) அபிதான சிந்தாமணி (ஆ) கதைகள் (இ) அபிதான கோசம்

3. எதில் சொல்லப் பட்டுள்ளனவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது?
(அ) இலக்கியம் (ஆ) சொற்பொருள் (இ) எதிர்ச்சொற்கள்

4. சொற்களுக்குரிய பொருளை எதன் மூலம் அறிந்து கொள்கிறோம்?
(அ) அகரமுதலி (ஆ) தமிழ் பாட நூல் (இ) திருக்குறள்

5. அபிதான கோசம் என்பது ஆகும்.
(அ) கலைக்களஞ்சியம் (ஆ) கதை (இ) இலக்கியம்

***II*. கீழ் உள்ள பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:** $5\ x\ 1 = 5$

முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இந்நூல் உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்து கூறுகிறது. இந்நூல் அறவுரைக் கோவை எனவும் வழங்கப்படுகிறது. இதில் பத்து அதிகாரங்கள் உள்ளன. ஓவ்வோர் அதிகாரத்திலும் பத்துச் செய்யுள்கள் உள்ளன. இந்நூல் நூறு பாடல்களால் ஆனது.

**வினாக்கள் :**

1. முதுமொழிக்காஞ்சிக்கு வழங்கப்படும் வேறுபெயர்.
(அ) ஆசாரக்கோவை (ஆ) முதுமொழிக்காஞ்சி (இ) அறவுரைக் கோவை (ஈ) இன்னிலை

2. இந்நூலில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
(அ) 10 (ஆ) 1330 (இ) 133 (ஈ) 80

3. இந்நூல் நூல்களுள் ஒன்று.
(அ) பத்துப்பாட்டு (ஆ) எட்டுத்தொகை (இ) பதினெண்கீழ்க்கணக்கு (ஈ) அறவுரை

4. இந்நூலில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை
(அ) 100 (ஆ) 10 (இ) 1000 (ஈ) 80

5. காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று
(அ) முதுமொழிக்காஞ்சி (ஆ) காஞ்சித்திணை (இ) உயர்திணை (ஈ) அ்.றிணை

**பகுதி –ஆ எழுதுதல் திறன் (10)**

***I*. கடிதம் 1 மட்டும் எழுதுக.** **(5)**

(அ) ஒரு நாள் விடுப்பு வேண்டி உன் வகுப்பாசிரியருக்கு கடிதம் எழுதுக.

(ஆ) மாவட்ட அளவில் விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனைப் பாராட்டி கடிதம் வரைக.

***II*. கட்டுரை 1 மட்டும் எழுதுக.** **(5)**
(அ) எங்கள் ஊர் (ஆ) அன்றாட வாழ்வில் அறிவியல்

**பகுதி -இ (இலக்கணம்)** **(10)**

1. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்
(அ) 8 (ஆ) 10 (இ) 12

2. ல் - என்பது என்ன எழுத்து?

www.kalvikkural.com

(அ) மெய்  (ஆ) உயிர்மெய்  (இ) உயிர்

3. உயிர் எழுத்து எத்தனை?
   (அ) 18  (ஆ) 12  (இ) 30

4. முதல் எழுத்து எத்தனை?
   (அ) 30  (ஆ) 216  (இ) 247

5. குறுக்கம் என பெயர் பெறும் சார்பெழுத்துக்கள் எத்தனை?
   (அ) 8  (ஆ) 5  (இ) 4

6. தனித்து இயங்கும் எழுத்து எது?
   (அ) முதல் எழுத்து  (ஆ) சார்பெழுத்து  (இ) உயிர்மெய்

7. முதல் எழுத்து என்பது…….
   (அ) அ  (ஆ) க  (இ) உயிரும் மெய்யும்

8. மெய்யெழுத்துக்கள் எத்தனை?
   (அ) 16  (ஆ) 18  (இ) 12

9. முதல் எழுத்து சொல்லை எழுதுக.
   (அ) அன்பு  (ஆ) தமிழ்  (இ) கடல்

10. உயிரளபெடை  வகைசைச் சார்ந்தது.
   (அ) முதல் எழுத்து  (ஆ) சார்பெழுத்து  (இ) தமிழ் எழுத்துக்களில் ஒன்று

**பகுதி - ஈ** **(10)**

***I.* ஏதேனும் 2 மட்டும் விடையளி :**

1. பொய்மையும் வாய்மையாவது எப்போது?
2. தமிழின் இளமை மாறாத் தன்மைக்கு காரணம் என்ன?
3. தமிழர் தம் பண்பாட்டை விளக்கும் நூல்கள் யாவை?

www.Kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-4
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஏழாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
பாடம் :தமிழ் (தாள்-1 ) நேரம் : 45 நிமிடம்

---

**பகுதி-(அ)- படித்தல் திறன்**

***I*. கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

சோழர் கால இலக்கியங்கள் தமிழ் மொழியின் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலமும் சோழர் காலமாகும். சோழர் காலத்தினை தன்னரசு காலம் எனத் தமிழண்ணல் அவர்கள் தமது நூலில் குறிப்பிடுகின்றார்.சோழர் காலம் வேற்று நாடுகளின் மீது மிகுதியாக படையெடுப்பு நடத்திய காலத்தில் வடமொழி தமிழில் கலப்பது மிகுதியாயிற்று கி.பி.10-ஆம் நூற்றாண்டில் சோழர்கள் குறுநில மன்னர்களாக சில பகுதிகளை ஆண்டு வந்தார்கள். விஜயாலய சோழன்,சோழ சாம்ராஜ்யத்தை நிறவியவன் ஆவான்.

வினாக்கள்: $5 x 1 = 5$

1.சோழர் கால இலக்கியங்கள் தமிழ் மொழியின்______இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன.
(அ) தற்கால (ஆ) பிற்கால (இ) பொற்கால

2.சோழர் காலத்தினை தன்னரசு காலம் என தமது நூலில் குறிப்பிட்டவர்.
(அ) தமிழண்ணல் (ஆ) தமிழன்னல் (இ) அண்ணல்

3. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலம்.
(அ) சேரர் காலம் (ஆ) சோழர் காலம் (இ) சோலர் காலம்

4. சோழர்கள் குறுகிய மன்னர்களாக சில பகுதிகளை ஆட்சி செய்த காலம்.
(அ) 10-ஆம் நூற்றாண்டு (ஆ) 11-ஆம் நூற்றாண்டு (இ) 12-ஆம் நூற்றாண்டு

5. சோழ சாமிராஜ்யத்தை நிறுவிய சோழ மன்னன்.
(அ) விஜயாலய சோழன் (ஆ) விஜய சோழன் (இ) சோழ விஜயன

**பகுதி – ஆ ( எழுதுதல்)**

***II*. கடிதம் அல்லது கட்டுரை எழுதுக.** **(5)**

(1) உனக்கு பிடித்த நூலைப்பற்றி நண்பனுக்கு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கட்டுரை ஒன்று எழுதுக.

**பகுதி - இ ( இலக்கணம்)**

***III*. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(5)**

1. முதலெழுத்துகளின் எண்ணிக்கை ________________.
(அ) 216 (ஆ) 30 (இ) 247

2. உயிர்மெய் எழுத்துகள் ________ வகையில் அடங்கும்.
(அ) சார்பெழுத்து (ஆ) சுட்டெழுத்து (இ) முதல் எழுத்து

3. தனிநிலை என்று அழைக்கப்படும் எழுத்து.
(அ) ஆய்தம் (ஆ) உயிர் (இ) மெய்

4. க , கா , கி என்பன எவ்வகை எழுத்துகள்.
(அ) உயிர் (ஆ) உயிர்மெய் (இ) மெய்

5. உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்தால் எவ்வகை எழுத்து தோன்றும்.
(அ) உயிர் (ஆ) மெய் (இ) உயிர்மெய்

***IV*. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி:** **(5)**

1. மீனாட்சிசுந்தரனாரின் பண்புநலன்களை விளக்குக.

**(அல்லது)**

ஊரும் பேரும் என்னும் கதையை சுருக்கி கட்டுரை எழுதுக.

www.kattukkol.com

# மாதிரி வினாத்தாள்-5
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஏழாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
**பாடம் : தமிழ் (தாள்-1 )** **நேரம் : 45 நிமிடம்**

---

**பகுதி-(அ)- படித்தல் திறன்**

***I***. **கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

பட்டினத்தடிகள் காவிரிப்பூம்பட்டிண வணிகர். இயற்பெயர்"திருவெண்காடர்' இவரிடமே சேந்தனார். கணக்கராக இருந்ததால் மகன் மருதவாணன் மூலம் உலக நிலையாமையுணர்ந்து துறவு மேற்கொண்டார். திருவிடை மருதூரில் பத்திகிரியாரொடு உறைந்து திருப்பதிகள் பல தரிசித்து திருவொற்றியூரில் சமாதியானவர். இவரியற்றியன ஆசிரியப்பாவில் அந்தாதித் தொடையில் 10 பாடல்கள் கொண்டது. இப்பட்டினத்தடிகள் திருவேகம் பாமாலை பாடிய பட்டினத்தடிகளினின்றும் வேறாவர். எனவே இவரைத் 'திருமுறைப் பட்டினத்தடிகள்'எனலாம். இவர் நம்பியாண்டார்க்கும் முந்தியவர். 10ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகலாம்.

**வினாக்கள்:** $5 x 1 = 5$

1. பட்டினத்தடிகளாரின் அந்தாதி தொடை ________ பாவகை கொண்டது.
   (அ) வெண்பா (ஆ) குறட்பா (இ) ஆசிரியப்பா
2. சேந்தனார் யாரிடம் உலக நிலையாமையை உணர்ந்தார்.
   (அ) ஆசிரியர் (ஆ) பட்டினத்தடிகள் (இ) மகன்
3. திருவெற்றியூரில் இவரது ________ உள்ளது.
   (அ) விலை (ஆ) சமாதி (இ) வீடு
4. இங்கு குறிப்பிடும் பட்டினத்தடிகள்
   (அ) ஒருவர் (ஆ) இருவர் (இ) நால்வர்
5. பட்டினத்தடிகளின் காலம்
   (அ) கி.மு.10ஆம் நூற்றாண்டு (ஆ) கி.பி.பத்தாம் நூற்றாண்டு
   (இ) 10 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி

**பகுதி (ஆ) எழுதுதல்**

***II***. **கடிதம் (அ) கட்டுரை எழுதுக.** $5 x 1 = 5$

' கண் தாணத்தின் அவசியம்' குறித்து நண்பனுக்கக் கடிதம் ஒன்று எழுதுக.
**(அல்லது)**
'சுற்றுலா வளர்ச்சியும் தேசிய ஒருமைப்பாடும்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

**பகுதி - இ ( இலக்கணம்)**

***III***. **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** $5 x 1 = 5$

1. 'வந்தான்' - இச்சொல் காட்டும் காலம்
   (அ) நிகழ்காலம் (ஆ) இறந்தகாலம் (இ) எதிர்காலம்
2. 'செயல்' முற்றுப்பெற்றதை உணர்த்துவது
   (அ) வினைச்சொல் (ஆ) பெயரெச்சம் (இ) வினைமுற்று
3. 'பழுத்த' என்பது __________ சொல்
   (அ) வினையெச்சம் (ஆ) முற்றுப்பெறாத வினைச்சொல்
   (இ) முற்றுப்பெற்ற வினைச்சொல்

www.kaltrukkol.com

4. ‘பழுத்த பழம்’ என்னும் இறந்தகால சொல் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எவ்வாறு வரும்.
   (அ) பழுக்கின்ற பழம்  பழுக்கும் பழம்
   (ஆ) பழுக்கா பழம் பழுக்கும் பழம்
   (இ) பழுத்த பழம் பழுக்காத பழம்

5. ‘எடுத்து வருகின்றான்’ – வினையெச்சம்
   (அ) நிகழ்கால வினையெச்சம்  (ஆ) இறந்தகால வினையெச்சம்
   (இ) எதிர்கால வினையெச்சம்

**IV. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி: (5)**

1. கைத்தறி நெசவு பற்றி விளக்குக.

   **(அல்லது)**

   ‘ நிலைத்த செல்வம் கல்விச்செல்வம்’ – என்னும் துணைப்பாடத்தைச் சுருக்கி கட்டுரையாக எழுதுக.

www.Kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-6
# வளரறித்தேர்வு

வகுப்பு : ஏழாம் வகுப்பு　　　　　　　　　　　　　　　　　　　　　மதிப்பெண் : 20
பாடம் : தமிழ் (தாள்-1 )　　　　　　　　　　　　　　　　　　　　　நேரம் : 45 நிமிடம்

---

**பகுதி-(அ)- படித்தல் திறன்**

***I*. கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

சோழர் கால இலக்கியங்கள் தமிழ் மொழியின் பொற்கால இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலமும் சோழர் காலமாகும். சோழர் காலத்தினை தன்னரசு காலம் எனத் தமிழண்ணல் அவர்கள் தமது நூலில் குறிப்பிடுகின்றார்.சோழர் காலம் வேற்று நாடுகளின் மீது மிகுதியாக படையெடுப்பு நடத்திய காலத்தில் வடமொழி தமிழில் கலப்பது மிகுதியாயிற்று கி.பி.10-ஆம் நூற்றாண்டில் சோழர்கள் குறுநில மன்னர்களாக சில பகுதிகளை ஆண்டு வந்தார்கள். விஜயாலய சோழன்,சோழ சாம்ராஜ்யத்தை நிறுவியவன் ஆவான்.

வினாக்கள்:　　　　　　　　　　　　　　　　　　　　　　$5 x 1 = 5$

1.சோழர் கால இலக்கியங்கள் தமிழ் மொழியின்______இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன.
(அ) தற்கால　(ஆ) பிற்கால　(இ) பொற்கால

2.சோழர் காலத்தினை தன்னரசு காலம் என தமது நூலில் குறிப்பிட்டவர்.
(அ) தமிழண்ணல்　(ஆ) தமிழன்னல்　(இ) அண்ணல்

3. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றிய காலம்.
(அ) சேரர் காலம்　(ஆ) சோழர் காலம்　(இ) சோலர் காலம்

4. சோழர்கள் குறுகிய மன்னர்களாக சில பகுதிகளை ஆட்சி செய்த காலம்.
(அ) 10-ஆம் நூற்றாண்டு　(ஆ) 11-ஆம் நூற்றாண்டு　(இ) 12-ஆம் நூற்றாண்டு

5. சோழ சாமிராஜ்யத்தை நிறுவிய சோழ மன்னன்.
(அ) விஜயாலய சோழன்　(ஆ) விஜய சோழன்　(இ) சோழ விஜயன்

**பகுதி – ஆ ( எழுதுதல்)**

***II*. கடிதம் அல்லது கட்டுரை எழுதுக.　　　　　　　　　　　　(5)**

(2)　உனக்கு பிடித்த நூலைப்பற்றி நண்பனுக்கு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கட்டுரை ஒன்று எழுதுக.

**பகுதி - இ ( இலக்கணம்)**

***III*. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.　　　　　　　　　(5)**

1.முதலெழுத்துகளின் எண்ணிக்கை ________________.
(அ) 216　(ஆ) 30　(இ) 247

2. உயிர்மெய் எழுத்துகள் ________ வகையில் அடங்கும்.
(அ) சார்பெழுத்து (ஆ) சுட்டெழுத்து (இ) முதல் எழுத்து

3. தனிநிலை என்று அழைக்கப்படும் எழுத்து.
(அ) ஆய்தம்　(ஆ) உயிர் (இ) மெய்

4. க , கா , கி என்பன எவ்வகை எழுத்துகள்.
(அ) உயிர் (ஆ) உயிர்மெய்　(இ) மெய்

5. உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்தால் எவ்வகை எழுத்து தோன்றும்.
(அ) உயிர்　(ஆ) மெய்　(இ) உயிர்மெய்

***IV*. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி:　　　　　　　　(5)**

1.மீனாட்சிசுந்தரனாரின் பண்புநலன்களை விளக்குக.

**(அல்லது)**

ஊரும் பேரும் என்னும் கதையை சுருக்கி கட்டுரை எழுதுக.

www.Kalvikol.com

# மாதிரி வினாத்தாள்-7
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஏழாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
**பாடம் : தமிழ் (தாள்-1 )** **நேரம் : 45 நிமிடம்**

---

**பகுதி-(அ)- படித்தல் திறன்**

***I*. கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

கவிஞர் வெ.இராமலிங்கனார், நாமக்கல் மாவட்டத்திலுள்ள மோகனூரில் பிறந்தவர். இவர்தம் பெற்றோர் வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள் ஆவர். இவர், கவிதைப் போட்டிகள் பலவற்றில் பங்கேற்றுப் பரிசகள் பெற்றார்.தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவருக்கு நடுவணரசு பத்மபூ'ண் விருது வழங்கிச் சிறப்பித்தது. இவர், தமிழக மக்களால் காந்தியக் கவிஞர் எனப் பெருமையுடன் வழங்கப்படுகிறார். இவரின் காலம் கி.பி.1888 முதல் 1972 வரையாகும்.

**வினாக்கள்:** $5 x 1 = 5$

1.தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர்_______.
(அ) வெ.இராமலிங்கனார் (ஆ) வெ.இராமலிங்கசுவாமி (இ) வெ.இராமசாமி

2.கவிஞர் வெ.இராமலிங்கனாருக்கு நடுவணரசு எவ்வகை விருது வழங்கிச் சிறப்பித்தது.
(அ) பத்மபூ'ண் (ஆ) பத்மவிபூ'ண் (இ) பாரத ரத்னா

3. தமிழக மக்களால் இராமலிங்கனார் எவ்வாறு வழங்கப்படுகிறார்.
(அ) காந்தியக்கவிஞர் (ஆ) மக்கள் கவிஞர் (இ) தமிழக கவிஞர்

4. எப்போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பல பெற்றார்.
(அ) கவிதை (ஆ) கதை (இ) இசை

5. வெ.இராமலிங்கனாரின் காலம்
(அ) கி.பி.1888 முதல் 1972 வரை (ஆ) கி.பி.1898 முதல் 1872 வரை
(இ) கி.பி.1988 முதல் 1982 வரை

**பகுதி – ஆ ( எழுதுதல்)**

***II*. கடிதம் அல்லது கட்டுரை எழுதுக.(எவையேனும் ஒன்றுக்கு மட்டும்) (5)**

1. விளையாட்டுத் திடல் வேண்டி பள்ளி முதல்வருக்கு விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

காலமும் கடமையும் என்னும் தலைப்பில ஓர் கட்டுரை வரைக.

**பகுதி - இ ( இலக்கணம்)**

***III*. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)**

2. 'உம்' – என்பது எவ்வகை சொல்
(அ) பெயர்ச்சொல் (ஆ) வினைச்சொல் (இ) இடைச்சொல்

2. வந்தான் , மேய்கிறது, பறக்கின்றன - இவை எவ்வகை சொற்கள்
(அ) பெயர்ச்சொல் (ஆ) வினைச்சொல் (இ)உரிச்சொல்

3. சொல் மொத்தம் _________ வகைப்படும்.
(அ) நான்கு (ஆ) ஐந்து (இ) ஆறு

4. பெயர் வினைகளைச் சார்ந்து, அவற்றின் குணத்தை உணர்த்தி வரும் சொல்.
(அ) உரிச்சொல் (ஆ) இடைச்சொல் (இ) முதல்சொல்

5. நாடு, ஊர் – என்பது எவ்வகை (சொல்) பெயர்
(அ) இடப்பெயர் (ஆ) காலப்பெயர் (இ) பண்புபெயர்

***IV*. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி: (5)**

1. கணிதமேதை இராமானுஜம் நினைவை அரசும் பிற அமைப்புகளும் எவ்வாறு சிறப்பித்துள்ளன?

2.'நன்றிப்பரிசு' என்னும் துணைப்பாடக்கதையை சுருக்கி ஒரு பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

www.kalvikkol.com

# மாதிரி வினாத்தாள்-8
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஏழாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
**பாடம் : தமிழ் (தாள்-2 )** **நேரம் : 45 நிமிடம்**

---

**பகுதி-(அ)- படித்தல் திறன்**

***I.* கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

ஜி. யு.போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப. கி.பி.1820 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் நாள், பிரான்சு நாட்டின் எட்வர்டு தீவில் ஜான்போப்புக்கம், கெதரின் யுளாபுக்கும் மகனாகப் பிறந்தார். போப்பின் பெற்றோர் சிறந்த கல்வியாளர்களாகவும் சமயப்பற்று மிக்கவர்களாகவும் விளங்கினர். தும் கழந்தைகளுக்குக் கல்வியையும் சமயத்தையும் கற்பித்ததுடன் நல்ல ஒழுக்கத்தையும் ஊட்டி வளர்த்தனர்.ஜி.யு.போப்பும் இளமையிலேயே சுறுசுறுப்பு விடா முயற்சி,ஊக்கம், உழைப்பு முதலியவற்றில் எல்லாம் மேம்பட்டுத் திகழ்ந்தார், போப்பின் தமையனார் ஹென்றி என்பவர், தமிழகத்தில் கிறித்துவச் சமயத்தைப் பரப்பும் சமய குருவாகப் பணியாற்றி வந்தார்.1908 ஆம் ஆண்டு இன்னுயிரை நீத்தார்.

**வினாக்கள்:** $5 x 1 = 5$

1. ஜி.யு.போப்பின் முழுபெயர்.
   (அ) ஜியார்ஜ் யுக்ளோபோப் (ஆ) ஜியாஜ் போப் (இ) யுக்ளோ போப்

2. ஜி.யு.போப் பிறந்த ஆண்டு
   (அ) கி.மு.1820 (ஆ) சி.பி.1820 (இ) கி.பி.1810

3. ஜி.யு.போப் தமிழகத்தில் எச்சமயத்தை பரப்பினார்.
   (அ) கிறித்துவ (ஆ) இந்து (இ) சீன

4. ஜி.யு.போப் எந்நாட்டவர்.
   (அ) பாரசீகம் (ஆ) இந்தியா (இ) பிரான்சு

5. ஜி.யு.போப் ________ ஆண்டு இயற்கை எய்தினார்.
   (அ) 1908 (ஆ) 1808 (இ) 2908

**பகுதி - ஆ ( எழுதுதல்)** **(5)**

***II.* கடிதம் அல்லது கட்டுரை எழுதுக.**

பள்ளியை விட்டு இடையில் நின்ற உமது நண்பனை மீண்டும் பள்ளிக்கு வருமாறு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

உடல்நலம் காப்போம் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**பகுதி - இ ( இலக்கணம்)**

***III.* உரிய விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** $5 x 1 = 5$

1. தனிந்து இயங்கி முதன்மைபெற்று விளங்கும் எழுத்துகள்.
   (அ) முதலெழுத்துகள் (ஆ) சார்பெழுத்துகள் (இ) ஆய்த எழுத்து

2. முதலெழுத்துகளைச் சார்ந்துவரும் எழுத்துகளை _____ என்கிறோம்.
   (அ) உயிர்எழுத்து (ஆ) சார்பெழுத்து (இ) மெய்யெழுத்து

3. சார்பெழுத்துகள் _________ வகைப்படும்.
   (அ) 10 (ஆ) 18 (இ) 12

4. ஆய்தம் _______ எழுத்து வகையைச் சார்ந்தது.
   (அ) முதல் எழுத்து (ஆ) மெய்யெழுத்து (இ) சார்பெழுத்து

5. எந்தெந்த எழுத்துகள் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துத் தோன்றும்?
   (அ) உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் (ஆ) மெய்யெழுத்தும், ஆய்த எழுத்தும் (இ) உயிர்மெய்யெழுத்தும், உயிர்யெழுத்தும்.

***IV.* எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி:** **(5)**

*1.* வாய்மையின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

**( அல்லது)**

கோவூர்கிழார் என்னும் கதையை சுருக்கி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

www.kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-9
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஏழாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
**பாடம் : தமிழ் (தாள்-2 )** **நேரம் : 45 நிமிடம்**

---

**பகுதி-(அ)- படித்தல் திறன்**

***I*. கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(5)**

நக்கீரர் கடைச் சங்கத்ததுத் தலைமைப் புலவர். இயற்பெயர் கீரன். உயர்வு கருதி சிறப்புணர்த்தும் 'ந' இடைச் சொல்லும். 'ஆர்' விகுதியும் சேர்த்து. நக்கீரனார் என்றழைப்பர். மதுரைக் கணக்காயனார் மகனார் என்பதால் இவரது ஊர் மதுரை. தந்தை கணக்காயர் மகன் கீரங்கொற்றனார். இன்ன மரபினர் என்றறியுமாறில்லை. அந்தணர் அல்லர். இலக்கியப் புலவர் சிங்கம். இலக்கிய ஆர்வலர்க்கு , இவர் ஒரு பெரும் புலவர் , சைவசீலர்க்கு ஒரு சமயப் பெரியார் உரையாசிரியர்கட்கு ஒரு முன்னோடி.

**வினாக்கள் :**

1. நக்கீரர் எக்கால புலவர் __________
   (அ) முதல் சங்க காலம் (ஈ) இடைசங்ககாலம் (இ) கடைசங்ககாலம்

2. நக்கீரர் எச்சமயத்தை சார்ந்தவர்.
   (அ) அந்தனர் (ஆ) வேளாளர் (இ) தெரியவில்லை

3. நக்கீரர் எந்நடையில் சிறந்தவர்.
   (அ) உரைநடை (ஆ) இலக்கணம் (இ) இலக்கியம்

4. இவர் பெயர் , உயர்வு கருதி அழைக்கப்படும் பெயர்
   (அ) நக்கீரர் (ஆ) நக்கிரனார் (இ) இளந்தத்தனார்

5. நக்கீரர் எவ்வாறும் அழைக்கப்படுகிறார்
   (அ) புலவர் சிங்கம் (ஆ) வங்க சிங்கம் (இ) இலக்கண சிங்கம்

**பகுதி – ஆ – எழுதுதல்**

***II*. கடிதம் அல்லது கட்டுரை எழுதுக.** **(5)**

1. "நூல் நிலையம்" என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

'தாய்மொழ வழிக்கல்வியின்' தேவை குறித்து நண்பனுக்கு ஓர் கடிதம் எழுதுக.

**பகுதி (இ) இலக்கணம்**

***IV*. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(5)**

1.முதல் வேற்றுமை வேறு எவ்வாறு அழைக்கப்படும்.
(அ) செயப்படுபொருள் வேற்றுமை (ஆ) எழுவாய் வேற்றுமை
(இ) மூன்றாம் வேற்றுமை

2. 'உருபு' இல்லாத வேற்றுமை
   (அ) இரண்டாம் வேற்றுமை (ஆ) மூன்றாம் வேற்றுமை
   (இ) விளிவேற்றுமை

3. 'தந்தையுடன் தம்பியும் வந்தான்" - இத்தொடரில் வரும் வேற்றுமை
   (அ) மூன்றாம் வேற்றுமை (ஆ) ஆறாம் வேற்றுமை
   (இ) எட்டாம் வேற்றுமை

4. பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தற் பொருளில் வருவது
   (அ) முதல் வேற்றுமை (ஆ) ஐந்தாம் வேற்றுமை (இ)விளிவேற்றுமை

5. ' தனிச்சொல்'- எவ்வாறு அழைக்கப்படும்.
   (அ) அடைமொழி (ஆ) ஐந்தாம் வேற்றுமை (இ) விளிவேற்றுமை

***IV*. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி:** **(5)**

1. இயற்கை வேளாண்மையின் தேவையை விளக்குக.·.
2. 'தூரத்து ஒளி' என்னும் துணைப்பாடத்தைச் சுருக்கி ஓர் கட்டுரை எழுதுக.

www.kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-10
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஏழாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
**பாடம் : தமிழ் (தாள்-2 )** **நேரம் : 45 நிமிடம்**

---

**பகுதி-(அ)- படித்தல் திறன்**

***I.* கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

களைப்பை நீக்கிக் கவலையைப் போக்கி
மூளைக்குத் தரும் சுறுசுறுப்பு
சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே நமது பொறுப்பு
சிந்திக்கத் தெரிந்த மனித இனத்திற்கே
சொந்தமான கையிருப்பு
எந்த ஜீவராசியும் செய்ய முடியாத
செயலாகும் இந்தச் சிரிப்பு

**வினாக்கள்:**

1. சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பது யாருடைய பொறுப்பு ___________
   (அ) மனித இனத்திற்கு (ஆ) மொழிக்கு (இ) இசைக்கு

2. சிந்திக்கத் தெரிந்த இனம் ________
   (அ) விலங்கினம் (ஆ) உயிரினம் (இ) இசைக்கு

3. எந்த ஜீவராசியாலும் செய்ய முடியாத செயல் ____________
   (அ) சிரிப்பு (ஆ) நடப்பது (இ) ஓடுவது

4. களைப்பை நீக்கிக் கவலையைப் போக்கி மூளைக்கும் தரும் _______
   (அ) வெறுப்பு (ஆ) சுறுசுறுப்பு (இ) மகிழ்ச்சி

5. இப்பாடலின் கருத்துகள் எந்த உயிர்களை குறிக்கின்றன.
   (அ) மனிதன் (ஆ) விலங்கு (இ) பறவை

**பகுதி – ஆ ( எழுதுதல்) (5)**

*II*. கட்டுரை அல்லது கடிதம் ( எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி)

1. நிதி உதவி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

**(அல்லது )**

‘கண்தானமும் இரத்த தானமும்’ என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை வரைக.

**பகுதி - இ (இலக்கணம்) (5)**

***III*. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ‘விலங்கு’ – என்பது எவ்வகை பெயர்
   (அ) காரணப்பொதுபெயர் (ஆ) இடுகுறிப்பெயர் (இ) பண்புப்பெயர்

2. இதில் _____ என்பது இடுகுறிப்பெயர் ஆகும்.
   (அ) பெட்டி (ஆ) விலங்கு (இ) காடு

3. ‘நாற்காலி’ – என்பது எவ்வகை பெயர்
   (அ) காரணப்பெயர் (ஆ) சினைப்பெயர் (இ) பொதுப்பெயர்

4. இடுகுறிப் பொதுப் பெயர்கள் ________
   (அ) மலை , காடு (ஆ) பலா , அவரை (இ) குதிரை , நாற்காலி

5. காரணச் சிறப்புப்பெயர் __________
   (அ) மாடு (ஆ) மரங்கொத்தி (இ) வளையல்

***IV*. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி : (5)**

1. மொழியைக் குறை கூறுபவர் பற்றிக் காந்தியடிகள் உரைப்பன யாவை?

**( அல்லது )**

‘உரியது’ என்னும் துணைப்பாடக் கதையைச் சுருக்கி ஒரு பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

www.Kalvikkol.com